ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1750/1 - 2012 මාර්තු 19 වැනි සඳුදා - 2012.03.19

*1750/1 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு**

*1934 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 5 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு மற்றும் 1972 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆந் திகதி கொண்ட திருத்தப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 51 ஆம் வாசகத்தின் கீழான அறிவித்தல்.*

அறிவித்தல்

*அவ்வப்போது திருத்தப்பட்ட 1934 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 5 ஆந் திகதி கொண்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2 ஆம் வாசகத்திற்கு மேலதிகமாகக் கீழ்க்காட்டப்படும் வண்ணம் இடை வாசகங்களை உட்புகுத்துவதன் மூலம் அப் பிரமாணக் குறிப்பு தொடர்ந்தும் இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றது :-*

*1. ஓய்வூபெற்ற அரச அதிகாரிகளை ஒப்பந்த அடிப்படையில் அல்லது சேவைத் தேவைப்பாட்டின் கீழ் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தி ஓய்வூதியத்தினை மீளாய்வு செய்கையில் அவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட மொத்தப் பணிக்கொடையினையும் அவர்களது புதிய கொடையிலிருந்து அறவிடுதல் வேண்டும்.*

*2. மேற்குறித்த விடயத்திற்குப் புறம்பாக, ஓய்வூதியக் கொடைப்பத்திரம் திருத்தியமைக்கப்பட்டு, ஓய்வூதியப் பணிக்கொடைத் தொகை திருத்தமடையும் வேறு சந்தர்ப்பங்களிலும் முன்னர் வழங்கப்பட்ட பணிக்கொடைத் தொகையினை சம்பூரணமாகப் புதிய பணிக்கொடைத் தொகையிலிருந்து அறவிடுதல் வேண்டும்.*

*3. இவ் விதிமுறைகள் ஆயுதப்படைச் சேவை ஓய்வூதியத் திருத்தங்களுக்கும் ஏற்புடையதாகும்.*

*டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,*
*பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.*

*பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 7,*
*2012, பெப்புருவரி 23.*

*4-5/1*

*கவனிக்க.- 1749/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல. 1749/ 29 ஆகும்.*

## ஒய்வூதியப் பிரமாணக் குறிப்பு

1934 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 5 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு மற்றும் 1972 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆந் திகதி கொண்ட திருத்தப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 51 ஆம் வாசகத்தின் கீழான அறிவித்தல்.

### அறிவித்தல்

அவ்வப்போது திருத்தப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2 ஆம் வாசகத்திற்கு மேலதிகமாகக் கீழ்க்காட்டப்படும் வண்ணம் இடை வாசகங்களை உட்புகுத்துவதன் மூலம் தொடர்ந்தும் திருத்தியமைக்கப்படுகின்றது.

1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைச்சட்டம் மற்றும் அதன் துணைச் சட்டங்கள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் ஓய்வூதிய உரித்தினைப் பெறும் உள்ளூராட்சி ஊழியர்களுக்கு ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் கீழ் ஓய்வூதியமொன்றிற்கான உரித்துக் கிடைக்கையில், குறித்த ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் கீழ் ஏற்புடையதாகும் விதிமுறைகள் அவ்விதத்திலேயே அவர்களுக்கும் ஏற்புடையதாகும்.

டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2012, பெப்புருவரி 23.

4- 5/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.